DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 2 of 2023** |
| **Deposition of witness for** | **:** | **PW- 7** |
| **Name** | **:** | பிரபாவதி |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**28.01.2026**

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது கூடலூர் அரசு துணை சுகாதார மையத்தில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். நான் அத்திப்பாலி அரசு துணை சுகாதார நிலையத்தில், செவிலியராக பணிபுரிந்து வந்த கடந்த 16.8.2021 அன்று ஏரியாவை பார்வையிடுவதற்காக சென்றபோது, ஒரு திருமணம் ஆகாத பெண், கர்ப்பமாக இருப்பதாக கேள்விப்பட்டேன். அந்த பெண்ணான சத்தியாவிடம் சென்று, அவரது கர்ப்பம் பற்றி கேட்டபோது அவர் முதலில் தான் கர்ப்பமாக இல்லை என்று

சொன்னார், பின்னர், நான் அவரை உண்மையை சொல்லுமாறு வலியுறுத்தியபோது, அவர் தன்னுடைய கர்ப்பத்திற்கு அமீர் மற்றும் நிஜாமுதின் என்பவர்கள்தான் காரணம் என்று சொன்னார். அவர் கர்ப்பமாக இருப்பது குறித்து மருத்துவ அட்டை பராமரிக்க வேண்டும் என்று கூறி, அந்த அமீர் மற்றும் நிஜாமுதின் என்பவர்களின் ஆதார் அடையாள அட்டையை சத்தியாவிடம் கேட்டபோது அவர் தன்னிடம் இல்லை என்று சொல்லிவிட்டார். அதனால், சத்தியாவை மருத்துவமனைக்கு வரவழைத்து, அட்மிட் செய்தோம். மருத்துவமனையில், மேற்படி சம்பவம் குறித்து என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

<u>**1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>:

நான் எந்த தேதி மற்றும் நேரத்தில் சத்தியாவின் வீடு இருந்த பகுதிக்கு விசிட் செய்தேன் என்று எனது விசாரணையில் சொன்னேன். நான் தடுப்பூசி செலுத்துவதற்காக சத்தியாவின் வீடு இருக்கும் பகுதிக்குதான் விசிட் செய்தேன். பொதுவாக, கர்பிணிகள் மற்றும் பால் கொடுக்கும் தாய்மார்கள் குறித்து தெரிந்துகொள்ளவும் விசிட் செய்வோம். நான் அந்த பகுதிக்கு விசிட் செய்வதற்குமுன்பு, சத்தியா கர்ப்பமாக இருந்தது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சத்தியா கர்ப்பமாக இருப்பது எப்படி தெரியும் என்றால், நான் ஒவ்வொரு வீடாக விசிட் சென்றபோது, சத்தியாவை விசாரித்தவகையில்தான், அவர் கர்ப்பமாக இருந்த விவரம் எனக்கு தெரியவந்தது. என்னுடன் யார்யார் விசிட்

வந்தார்கள் என்ற விவரத்தையும் நான் போலிஸ் விசாரணையில் சொன்னேன். சத்தியா, தானாகவே அவர் கர்ப்பமாக இருந்த விவரத்தை என்னிடம் சொன்னார் என்றும் போலிஸ் விசாரணையில் சொன்னேன். என்னுடன், சாஜிதா, பாத்திமாசூரா, கலா, சீமந்தினி என்ற ஆஷா Workerகள் என்னுடன் வந்தார்கள். நான் அட்டை எழுதுவதற்காக, கர்ப்பத்திற்கு யார் காரணம் என்று கேட்டபோது, சத்தியா சொல்லவில்லை, பின்னர் போலிசார் விசாரணையில்தான் கர்ப்பத்திற்கு யார் காரணம் என்று சொன்னார். நான் தற்போது விசாரணையில் சொன்ன விவரங்கள், போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தபோதுதான் தெரியவந்தது என்றால், சரிதான். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தபோதுதான் அமீர் என்ற பெயர் எனக்கு தெரியவந்தது என்றால், அந்த பெண் சொன்னதின் பேரில் தெரியவந்தது.

<u>2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

நான் கிராம செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கிராமத்திற்கு சென்று, எனக்கு தெரியவரும் விவரங்களை, எனது மருத்துவரிடம் சொல்லி, அவர் கொடுக்கும் அறிவுரையின் பேரில்தான் செயல்படுவேன் என்றால், சரிதான். சத்தியா என்பவர் கர்ப்பமாக இருப்பது குறித்தும் மருத்துவரிடம் சொல்லி, அவர் வழங்கிய அறிவுரையின்பேரில்தான் செயல்பட்டேன். நான் சத்தியாவிடம் விசாரித்தபோது, முதலில் அவர், தன் கர்ப்பத்திற்கு

யார் காரணம் என்று சொல்லவில்லை. சத்தியாவை, குழந்தை பிறப்பதற்காக மருத்துவமனையில் சேர்த்தபோது நான் செல்லவில்லை. அவருக்கு குழந்தை பிறந்தது பற்றி பின்னர் கேள்விப்பட்டேன். சத்தியாவின் கர்ப்பத்திற்கான காரணம் பற்றி போலிசார் சொன்ன பின்னர்தான் எனக்கு தெரியவந்தது. நான், சத்தியாவின் வீட்டிற்கு பின்னர் வாரா வாரம் சென்று வந்தேன். சத்தியாவிற்கு குழந்தை பிறந்து 10 மாதங்களுக்கு பிறகுதான் அவருக்கு திருமணம் நடந்தது. அதற்கு பிறகு நான் பணிமாறுதலில் சென்றுவிட்டேன். அதற்கு பிறகு சத்தியாவிற்கு என்ன நடந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது, தற்போதுதான், அவருக்கு 2வதாக குழந்தை பிறந்த விவரம் தெரியவந்தது. சத்தியா, நிஜாமுதினை திருமணம் செய்துகொண்டு, அவருடன்தான் வசித்து வருகிறார். 2வது குழந்தை நிஜாமுதின் மூலம்தான் பிறந்தது என்றால், சரிதான். தற்போது அவர்கள் குழந்தைகளுடன் நன்றாக வசித்து வருகிறார்கள்.

S.
CHANDRASEKARAN

Digitally signed by
S.
CHANDRASEKARAN
Date: 2026.01.28
17:22:15 +0530